**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC No.8287/2014 | Date | : 24.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : முருகேசன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு மாவட்டம், காஞ்சிகோயில், கவுண்டம்பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். நான் கடந்த 2014 ஆம் வருடம் ஜூலை மாதம் கடைசி வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சுமார் 08:30 மணி அளவில் காளிங்கராயன் பாளையத்தில் கவுந்தப்பாடிக்கு திரும்பும் சாலையில் உள்ள ஒரு டீக்கடையில் நான் டீ குடித்துக் கொண்டிருந்தேன். குமாரவடிவேல் என்பவர் அப்போது அங்கு வந்து என்னிடம் ஒரு போர்முரசு பத்திரிக்கையும், ஒரு வால்போஸ்ட்டையும் என்னிடம் கொடுத்தார். மேலும் கே.ஏ.எஸ் ஆறுமுகம் செய்துள்ள அயோக்கியத்தனத்தை பாருங்கள் என்றும் கூறினார். நான் அந்த புத்தகத்தைப் படித்து பார்த்துவிட்டு மேற்படி ஆறுமுகத்திடம் சென்று அதனை கொடுத்து விட்டேன். அவர் அதை படித்து பார்த்துவிட்டு இது சம்பந்தமாக தான் வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றும், அதில் நான் சாட்சி சொல்ல வேண்டும் என்று சொன்னார்.

2. நானும் என்னுடன் அந்தியூர் பழனிசாமி என்பவரும் வந்தார். நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்துதான் மேற்படி புத்தகத்தையும், வால்பேப்பரையும் ஆறுமுகத்திடம் கொடுத்தோம். அதன் பிறகு மேற்படி ஆறுமுகத்தின் பெயரை சொன்னால் யாரும்

நிலத்தை வாங்கவோ, விற்கவோ முன்வர மறுத்தார்கள். மேற்படி புத்தகத்தையும் வால்பேப்பரையும் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் வால்பேப்பர் (பு.சா.சா.ஆ 1) மற்றும் புத்தகத்தை (பு.த.சா.ஆ.8) தான் நான் ஆறுமுகத்திடம் கொடுத்ததாகும்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆறுமுகத்தை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் மேற்படி சம்பவத்திற்கு முன்பு சுமார் 15 ஆண்டுகளாக தெரியும். மேற்படி ஆறுமுகம் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஆறுமுகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வால்பேப்பர், புத்தகம் ஆகியவை உண்மையானது என்று ஆறுமுகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகத்தால் மேற்படி வால்பேப்பர் புத்தகம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் டீ குடித்துக்கொண்டிருக்கவில்லை என்றும், அப்போது நான்காம் எதிரி குமாரவடிவேல் என்னிடம் போர் முரசு என்ற புத்தகமும், வால்பேப்பரும் கொடுக்கவில்லை என்றும், கே ஏ எஸ் ஆறுமுகம் செய்துள்ள அயோக்கியத்தனத்தை பாருங்கள் என்று என்னிடம் சொல்ல வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்படி புத்தகத்தை கொண்டு சென்று ஆறுமுகத்திடம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

2. என்னுடன் அந்தியூர் பழனிச்சாமியும் உடன் வந்திருந்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்படி டீ கடைக்கு குமாரவடிவேல் வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் டீ கடைக்கும் குமாரவடிவேல் இருக்கும் இடத்திற்கும் சுமார் 03 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றும், அதனால் அங்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியில்லை. என்னை யார் என்று குமார வடிவேலுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

3. எனக்கு ஆறுமுகத்தை தெரியும் என்ற விவரமும், ஆறுமுகத்திற்கு என்னை தெரியும் என்ற விவரமும், குமாரவடிவேலுக்கு தெரியாது என்றும், அதனால் ஆறுமுகம் பற்றிய விவரத்தை என்னிடம் குமாரவடிவேல் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. குமாரவடிவேல் என்னிடம் போர் முரசு பத்திரிகையும் வால்பேப்பரும் கொடுத்ததாக ஆறுமுகம் சொன்னதின் அடிப்படையில் நான் ஆறுமுகத்தின் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள போர் முரசு என்ற பத்திரிக்கை பற்றியோ வால்பேப்பர் பற்றியோ குமாரவடிவேலுக்கு தெரியாது என்றால் சரியில்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.02.24 17:22:09 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC No.8287/2014 | Date | : 24.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : பழனிச்சாமி | Calling | : |
| Father Name | : அவனாசிக்கவுண்டர் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு மாவட்டம் அந்தியூர், ஒட்டன் தோட்டம், பொய்யேறி கரையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். மேலும் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து தருகிறேன். நானும் கவுண்டம்பாளையத்தை சேர்ந்த முருகேசனும் ஒரு இடத்தை பார்ப்பதற்காக காளிங்கராயன் பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் கவுந்தப்பாடி செல்லும் சாலையில் உள்ள ஒரு டீக்கடையில் நாங்கள் டீ குடித்துக் கொண்டிருந்த போது, குமாரவடிவேல் என்பவர் டீக்கடைக்கு வந்து ஒரு புத்தகமும் ஒரு பேப்பர் கட்டிங் கொண்டு வந்தார். எங்களிடம் கொண்டு வந்து கொடுத்து கே ஏ எஸ் ஆறுமுகம் செய்த அயோக்கியத்தனத்தை பாருங்கள் என்று கூறி அதில் உள்ள சங்கதிகளை படித்தும் காண்பித்தார். நாங்களும் அதை படித்து பார்த்தோம்.

2. பின்பு டீக்கடையில் இருந்த மற்ற நபர்களிடம் மேற்படி குமாரவடிவேல் நான்கைந்து புத்தகங்களை கொடுத்து விட்டு சென்று விட்டார். நாங்கள் மேற்படி புத்தகத்தையும் பேப்பர் கட்டிங்கையும் கொண்டு சென்று ஆறுமுகத்திடம் கொடுத்தோம். அவரும் அதைபடித்துப் பார்த்தார். பின்னர் யார் அதை கொடுத்தார்கள் என்று கேட்டார் குமார் வடிவேல் கொடுத்ததாக நாங்கள் சொன்னோம். மேற்படி புத்தகம் தொடர்பாக தான் வழக்கு தாக்கல் செய்ய இருப்பதாகவும் அதில் சாட்சியம்

அளிக்க வரும்படியும் எங்களிடம் ஆறுமுகம் சொன்னார். நாங்கள் சரி என்று ஒப்புக்கொண்டோம். பின்னர் ஒரு வாரம் கழித்து ஆறுமுகம் எங்களை அழைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், சாட்சியம் அளிக்க வரும்படியும் சொன்னார். மேற்படி புத்தகத்தையும், பேப்பர் கட்டிங்கையும் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பேப்பர் கட்டிங் மற்றும் புத்தகம் தான் நாங்கள் ஆறுமுகத்திடம் கொடுத்ததாகும்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆறுமுகத்தை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் மேற்படி சம்பவத்திற்கு முன்பு சுமார் 15 ஆண்டுகளாக தெரியும். மேற்படி ஆறுமுகம் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஆறுமுகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வால்பேப்பர், புத்தகம் ஆகியவை உண்மையானது என்று ஆறுமுகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகத்தால் மேற்படி வால்பேப்பர் புத்தகம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து போர் முரசு என்ற பத்திரிக்கை மற்றும் வால்பேப்பரை குமாரவடிவேல் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆறுமுகத்தின் அயோக்கியத்தனத்தை பாருங்கள் என்று குமாரவடிவேல் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், வைத்து எதிரி குமாரவடிவேல் என்னை சந்திக்க வில்லை என்றால் சரியல்ல.

2. குமாரவடிவேலுக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு ஆறுமுகத்தை தெரியும் என்ற விவரமும் ஆறுமுகத்திற்கு என்னை தெரியும் என்ற விவரமும் குமாரவடிவேலுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனவே ஆறுமுகத்தை பற்றி குமாரவடிவேல் என்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் எதுவும்

இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் அந்த இடத்தில் டீக்கடை எதுவும் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் டீக்கடையின் பெயரை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. டீக்கடை உள்ளதாக சொல்லப்படும் இடத்திற்கும் குமாரவடிவேல் வீட்டிற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றும் அதனால் அவர் அங்கு வருவதற்கு எந்த அவசியமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. குமாரவ வடிவேலுக்கும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போர்முரசு மற்றும் வால்பேப்பருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி போர் முரசு பத்திரிகையையும் வால்பேப்பரையும் ஆறுமுகத்திடம் சென்று நானும் முருகேசன் என்பவரும் கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. ஆறுமுகம் எனது நண்பர் என்பதால் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.02.24 17:22:22 -0800

Judicial Magistrate No.III,

Erode.